# IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 154/2012 |
| | | P/W's | : | 1 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | Murugayee | CASTE | : | |
| S/O. / W/O. | Murugan | RELIGION | : | |
| VILLAGE | | CALLING | : | |
| TALUK | | AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை : **22.4.2021**

நான் எந்த ஊரில் வசித்து வருகிறேன் என்றால், பங்களாபட்டியில் வசித்து வருகிறேன். நான் அந்த ஊரில் வசித்து வருவதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தை நாங்கள் கூட்டாக அனுபவம் செய்து வந்தோம் என்பதற்கு ஆதரவாக ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து 1ம் பிரதிவாதி சேவி என்பவருக்கு தனிப்பட்ட பாத்தியமானது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மற்றும் அனைவருக்கும் கூட்டு பாத்தியமான சொத்தாகும். தாவா சொத்தை 2 முதல் 4 பிரதிவாதிகளாகிய வேலாயி சரசுவதி தனலெட்சுமி ஆகியோர்களுக்கு கூட்டு பாத்தியம் என்பதற்கு ஆதரவாக ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா பிராதில் தாவா சொத்தினை நாங்கள் கூட்டாக அனுபவம் செய்து வருவதாக வாதுரைத்துள்ளோம் என்றால் சரிதான். தாவா சொத்தை நாங்கள் கூட்டாக அனுபவம் செய்து வரவில்லை என்றும், தாவா சொத்தானது 1ம் பிரதிவாதி சேவி என்பவருக்கு தனிப்பாத்தியம் என்றால் சரியல்ல. நாங்கள் தாவா சொத்தை கூட்டாக அனுபவம் செய்து வரும் பட்சத்தில் அதற்குரிய பட்டா, சிட்டா கிஸ்தி ரசீதுகள் எதுவும் ஏற்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. அவ்வாறு கூட்டாக அனுபவம் செய்து வராததால் தான் கூட்டாக வருவாய்துறை ஆவணங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஓம். D. ராம்கணேஷ்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி